TYPEWRITERS

Sales & Service
FUDO, 39/17, Power House Rd, 3rd Lane, Jaffna.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

ரைப்ரைட்டர் வாங்கவும் - விற்கவும் திருத்தவும்
தமிழ் - ஆங்கில ரைப்பிங் வேலைகளுக்கும்
FUDO OFFICE MACHINE CO.
39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 27 வியாழக்கிழமை (09-04-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 134

# அரபாத் பயணம் செய்த விமானம் பாலைவனத்தில் தரையிறக்கம்!

## அவர் உரசல் காயங்களுடன் தப்பினார்; 3 விமானிகளும் பலி!

திரிப்பொலி, ஏப். 9

பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத் பயணம் செய்த விமானம் நேற்று அதிகாலை சஹாரா பாலைவனத்தில் மோதித் தரையிறக்கப்பட்டது

பாலைவன மணலில் விமானம் மோதித் தரையிறங்கிய போது யாசிர் அரபாத் உரசல் காயங்களுக்கு இலக்கானார். அவருடன் பயணம் செய்த அவரது உதவியாளர்கள் ஒன்பது பேரும் சிறிய காயங்களுடன் தப்பினர். ஆனால் விமானப் பைலட்டுகள் மூன்று பேரும் இச்சம்பவத்தில் கொல்லப்பட்டனர் என்று லிபிய வானொலி அறிவித்தது

லிபிய நகரான அல்சராவிலிருந்து 70 கிலோ மீற்றர் தொலைவில் — சஹாரா பாலைவனத்தினிடையே— விமானம் மோதி தரையிறக்கப்பட்டது.

பாலைவனத்தில் எழுந்த பெரும் மண் புயல் காரணமாகவே விமானம் இடையில் தரையிறக்கப்பட்டு சுமார் 15 மணி நேரத்தின் பின்னர் அரபாத்தும் அவரது உதவியாளர்களும் மீட்கப்பட்டனர்.

அப்பகுதியில் உள்ள பலஸ்தீன விடுதலை இயக்க முகாமைச் சேர்ந்த பலஸ்தீன கெரில்லாக்களே விமானம் மோதித் தரையிறக்கப்பட்ட இடத்துக்கு முதலில் சென்றடைந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

லிபியாவின் தலைநகர் திரிப்பொலிக்கு அரபாத் தற்போது திரும்பியுள்ளார் என்றும்—

ரியூனிஸியாவில் உள்ள பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைமைக் காரியாலயத்துக்கு அவர் விரைவில் திரும்புவார் என்றும் பி. பி. ஸி. நேற்றிரவு அறிவித்தது. [உ-எ-10]

## 15 மணி நேரத்தின் பின் விமானம் கண்டுபிடிப்பு

திரிப்போலி, ஏப். 9

பலஸ்தீனத் தலைவர் யாசிர் அரபாத் பயணம் செய்த 'அன்டனோவா - 26' விமானம், லிபியாவின் தென் பகுதியில் — சஹாரா பாலைவனத்தில் — நிற்பதை அமெரிக்க செயற்கைக் கோள் ஒன்றே முதன் முதலாகக் கண்டுபிடித்தது.

விமானம் காணாமற்போய் 15 மணி நேரத்தின் பின்னரே அமெரிக்க செயற்கைக் கோளினால் அந்த விமானத்திலிருந்து அனுப்பப்பட்ட வானொலி அபாய சமிக்ஞை

[4 ஆம் பக்கம் பார்க்க]

## சஹாரா பாலைவனத்தில் விமானம் திடீரெனமறைந்தது

திரிப்பொலி, ஏப். 9

யாசிர் அரபாத் பயணம் செய்த விமானம் நேற்று முன் தினம் இரவு [இலங்கை நேரப்படி நேற்று அதிகாலை] சஹாரா பாலைவனப் பகுதியில் பறந்து கொண்டிருந்தபோது திடீரெனக் காணாமற் போனது.

சூடானில் இருந்து புறப்பட்டு தென்கிழக்கு லிபியாவில் உள்ள அல்சாராவில் பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் முகாம் ஒன்றுக்கு யாசிர் அரபாத் சென்று கொண்டிருந்தபோதே விமானம் காணாமற்போனது.

லிபியாவின் சஹாரா பிரதேசத்திற்கு மேலாய் பறந்து கொண்டிருந்தபோது விமானம் தங்களது ராடர் திரையிலிருந்து மறைந்து விட்டதாக லிபிய விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டுப் பிரிவை மேற்கோள் காட்டி லிபிய செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

[4 ஆம் பக்கம் பார்க்க]

# வடக்கில் பெரும் தாக்குதலை நிறுத்தி கிழக்கே தீவிரப்படுத்த புதிய திட்டம்

## 3 மாதங்களில் முழுக்கப் பிடிப்பராம்

கொழும்பு, ஏப்ரல் 9

வடக்கு - கிழக்கில் யுத்தத்தை நடத்துவதற்காக, இராணுவம் முற்றிலும் புதிய திட்டம் ஒன்றை தயாரித்துள்ளதாக அறியப்படுகிறது.

புதிய திட்டத்தின் பிரகாரம், வடக்கின் மீது பெரும் தாக்குதல் நடத்துவதை இப்போதைக்கு நிறுத்தி, கிழக்கின் மீது தாக்குதல்களை தீவிரப்படுத்த முடிவாகியுள்ளதாக பி. பி. சியின் கொழும்புச் செய்தியாளர் கிறிஸ்தோபர் மொறிஸ் அறிவித்திருக்கிறார்.

கிழக்கு மாகாணம் முழுவதையும் மூன்று மாத காலத்திற்குள் இராணுவ கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதும் —

அதன் பின் அங்கு தேர்தலை நடத்துவதும் — இராணுவத்தினரின் புதிய திட்டமாம்.

வடக்கு - கிழக்கில் நடத்தப்படும் யுத்தத்தை நடத்தும் அதிகாரம் கூட்டுப்படைத் தலைமையகத் தளகர்த்தரிடம் இருந்து நீக்கப்பட்டு, முப்படைத் தளபதிகளுக்கும், பொலிஸ் மா அதிபருக்கும் இம்மாத ஆரம்பத்தில் வழங்கப்பட்டது

அதனைத் தொடர்ந்து இராணுவம் புதிய தாக்குதல் திட்டத்தையும், உத்தியையும் வகுத்துள்ளது.

அந்தப் புதிய திட்டத்தின் பிரகாரம் — வடக்கின் மீது நடத்த முன்னர் உத்தேசிக்கப்பட்ட பெரும் எடுப்பிலான தாக்குதல் நீக்கப்பட்டுவிட்டது என்றும்—

வடக்கின் மீது செலுத்தப்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## இராணுவ உயர் அதிகாரிகள் ராஜினாமா செய்வார்களா?

கொழும்பு, ஏப் 9

இராணுவ உயர் அதிகாரிகள் பலர் ராஜினாமாச் செய்வர் என்று கொழும்பில் நேற்று பலமாகப் பேச்சடிபட்டது.

உயர் அதிகாரிகள் பலரும் ராஜினாமாச் செய்வது குறித்து தனிப்பட்ட முறையில் அடிக்கடி சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தியதாகவும் அறிய வந்தது

யாழ்ப்பாணத்தின் மீதான

[4 ஆம் பக்கம் பார்க்க]

## காட்டிலிருந்து ஆயுதங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், ஏப். 9

வவுனியா கனகராயன் காட்டுப் பகுதியில் இருந்து இராணுவத் தளபாடங்கள் சிலவற்றை விடுதலைப் புலிகள் நேற்று முன் தினம் கைப்பற்றினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ரீ - 56 ரகத்துப்பாக்கி, அதற்கான மகஸின் மற்றும் 55 நடுத்தர ரவைகளுமே கைப்பற்றப்பட்டுள்ளன.

[அ-165-5]

## யாழ் ஆயருக்கு 75 வயது நிறைவு

யாழ். ஆயர் அதி. வண. கலாநிதி மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகையின் 75 ஆவது பிறந்த தினம் இன்றாகும்.

கடந்த 25 வருடங்களாக யாழ். ஆயராக இருந்து வந்த இவரது சேவைக் காலமும் இன்றுடன் முடிவடைகின்றது.

எனினும் கத்தோலிக்க மறை மாவட்ட யாப்பின்படி புதிய ஆயர் ஒருவர் பதவி ஏற்கும் வரை அதி. வண. தியோகுப்பிள்ளை ஆண்டகை ஆயருக்குரிய கடமைகளை தொடர்ந்து கவனித்து வருவார் என்று தெரிக்கப்பட்டது.

## வீரமரணம்

யாழ்ப்பாணம், ஏப். 9

வீரவேங்கை பிறேமன் [இராசையா தேவதாஸ் — பளுகாமம்] நேற்று முன் தினம் மட்டக்களப்பில வீரமரணமடைந்தார் என விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. [அ-3]

## முச்சந்தி முரளி



உவையில யார் உருத்திராக்ஷப் பூனையோ..............

## ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஏப்.9

கட்டுவன், விமன்காமம் பகுதிகளில் நிலைகொண்டுள்ள படையினர் தமது காவரண்களில் இருந்து நேற்று முன்தினம் இரவு சரமாரியான துப்பாக்கித் தாக்குதலை மேற்கொண்டனர்.

[அ 5]

## அரபாத்தின் விமானம் மணற் புயலில் சிக்கியது!

திரிப்பொலி, ஏப்.9

பலஸ்தீனிய விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத் பயணம் செய்த விமானம் மணற் புயலில் சிக்கியதன் காரணமாகவே பலவந்தமாக பாலைவனத்தில் தரையிறக்கப்பட்டது என்று அறிவிக்கப்பட்டது.

சீரற்ற காலநிலை காரணமாக வேறு வழியின்றி விமானம் கட்டாயமாகத் தரையிறக்கப்படுகிறது என்பதை விமானி கடைசியாக அறிவித்தார் என்றும் —

அதனை கிரேக்கிய அரச வானொலி அவதானிப்புச் சேவை செவிமடுத்தது என்றும் அறிவிக்கப்பட்டது.

அதன் பின்னரும் விமானியிடமிருந்து மற்றொரு செய்தி வந்தது என்றும் —

ஆனால் அவர் என்ன கூறினார் என்பது தெளிவாக விளங்கவில்லை என்றும் கிரேக்கிய அவதானிப்புச் சேவை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [உ-எ-த-10]

## யாழ்ப்பாணத்துக்கு நேற்று ஜி.சீ.ஈ. பெறுபேறுகள் வந்தன

யாழ்ப்பாணம், ஏப். 9

ஜி. சீ. ஈ. சாதாரண தர பரீட்சை முடிவுகள் நேற்றிரவு யாழ். வந்து சேர்ந்தன.

கொழும்பில் இருந்து யாழ். அரச அதிபர் அவற்றைத் தம்முடன் எடுத்து வந்துள்ளார்.

பரீட்சை முடிவுகள் இன்று காலை யாழ். கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்கப்படும் எனவும், அவை பாடசாலைகளுக்கு இன்றே வழங்கப்படும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது.

## பிரிட்டிஷ் தேர்தல் இன்று

லண்டன், ஏப். 9

பிரிட்டனில் இன்று நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் நடைபெறுகின்றது.

கடைசியாக நடத்தப்பட்ட கருத்துக் கணிப்புப்படி ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சியிலும் பார்க்க தொழிற்கட்சி 3 சதவீதத்தினால் முன்னணியில் நிற்பதாக அறிவிக்கப்படுகின்றது.

650 எம். பிக்கள் இத் தேர்தலில் தெரிவு செய்யப்படுவர்.

[இ-எ]

## மற்றும் ஒரு தொகுதி அகதிகள் வருகை

சென்னை, ஏப். 9

540 பேர் அடங்கிய 150 இலங்கைத் தமிழ் அகதிக் குடும்பங்களைக் கொண்ட மற்றும் ஒரு தொகுதியினர் நேற்று முன்தினம் இராமேஸ்வரத்திலிருந்து கப்பல் மூலம் மன்னாருக்குப் புறப்பட்டனர்.

இந்தியாவிலிருந்து இலங்கை திரும்பும் பத்தாவது அகதிகள் தொகுதி இதுவாகும்.

இதுவரை 5 ஆயிரம் இலங்கை தமிழ் அகதிகள் தாயகம் திரும்பியுள்ளனர்.

# உடுகம்பொல கடமையாற்றிய இடங்களிலேயே கறுப்புப்பூனைக் கொலைப்படையும் செயற்பட்டது!

கொழும்பு, ஏப். 9

கறுப்புப் பூனை என்ற பெயரிலான கொலைப் படையை அமைப்பதற்குத் தான் பொறுப்பு அல்லன் என்று முன்னாள் பிரதிப்

## குற்றச்சாட்டுக்களை மறுத்து பிரதமர் நேற்று அறிக்கை

பொலிஸ் மா அதிபர் பிரேமதாஸ உடுகம்பொல கூறுவதில் எந்தவித உண்மையும் இல்லை. உடுகம்பொல எங்கெங்கு கடமையாற்றி வந்தாரோ அப்பகுதிகளிலேயே இந்த கறுப்புப் பூனை, கொலைப் படையினரும் செயற்பட்டு வந்தனர்.

பிரதமரும் பாதுகாப்புத் துணை அமைச்சருமான திரு. டி. பி. விஜேதுங்கா நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

திரு. உடுகம்பொல பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையை மறுத்து இந்த அறிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

திரு. உடுகம்பொல தனது அறிக்கையில் தெரிவித்த குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என்றும் மக்களைத் தவறாக வழி நடத்தும் தன்மையானவையாக அவை உள்ளன என்று திரு விஜேதுங்கா நேற்று வெளியிட்ட தனது பதில் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திரு. விஜேதுங்கா தனது அறிக்கையில் கூறியிருப்பதாவது:

### ரஞ்சன் கொலை விவகாரம்

ரஞ்சன் விஜேரத்னா கொலை பற்றிய விசாரணைகளை நடத்தத் தம்மை அனுமதிக்கவில்லை என திரு உடுகம்பொல கூறுகிறார்.

அப்படியான விசாரணைகள் குற்றப் புலனாய்வுப் பொலிஸ் மற்றும் இரகசியப் பொலிஸ் திணைக்களம் ஆகியவற்றின் அதிகார வரம்பிற்கு உட்பட்டது என்று பொலிஸ் மா அதிபர் எனக்கு அறிவித்திருக்கிறார்.

திரு. உடுகம்பொல தலைமையிலான விசேட நடவடிக்கை பணியகத்தின் அதிகார வரம்புக்குள் இக்கொலை பற்றிய விசாரணை வரவில்லை.

இக்கொலை பற்றிய விசாரணைகளைத் தொடர்ந்து, குற்றப் பத்திரிகைகள் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன

இந்த வழக்கு எதிர்வரும் 21 ந்திகதி மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது.

### நடத்தை குறித்து பாதக விமர்சனம்

திரு. உடுகம்பொல பற்றியும் அவரது செயல்பாடுகள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஓய்வூதிய வவுச்சர்கள்

யாழ்ப்பாணம், ஏப். 9

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களுக்குரிய ஓய்வூதிய வவுச்சர்கள் நேற்று இங்கு வந்து சேர்ந்தன.

# பிரேமதாசாவைக் கொல்ல லலித் திட்டம் தீட்டினார்

## உடுகம்பொல அறிக்கை தந்ததாக பிரதமர் தகவல்

முன்னாள் கல்வி அமைச்சர் லலித் அத்துலத் முதலி வெளிநாட்டுக் கூலிப்படையினரின் உதவியைப் பெற்று ஜனாதிபதி பிரேமதாசாவைப் படுகொலை செய்யத் திட்டமிட்டார். இதற்காக இவர் மோட்டியர் என்ற பெண்ணுடன் சேர்ந்து சதி செய்தார்.

பிரதிப் பொலிஸ் மா அதிபர் உடுகம்பொல கடந்த வருடம் ஜூன் மாதம் அரசுக்கு சமர்ப்பித்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார் என்று பிரதமரும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு. டி. பி. விஜேதுங்க நேற்று விடுத்த பதில் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திரு. உடுகம்பொல சமர்ப்பித்த அறிக்கையின் பிரகாரம் உடனடியாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன என்றும்—

ஆனால் அதில் எந்தவித உண்மையும் இல்லை என்பது நிரூபிக்கப்பட்டது என்றும் பிரதமர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்தார்.

[இ-20]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

வெள்ளை நிற இனி கோழிகள் விற்பனைக்குண்டு. F. S. றெஜினோல்ட் மார்க், இல. 68, 2-ஆம் குறுக்குத் தெரு, மணியந்தோட்டம், யாழ்ப்பாணம். [20389]

### மலிவு விற்பனை

1992 ஆம் ஆண்டுக்கான திருக்கணித பஞ்சாங்க மாதக் கலண்டர், டயரிகள் மலிவு விலையில் எல்லாப் புத்தக சாலைகளிலும் விற்பனையாகின்றன. அன்பளிப்புச் செய்யும் நிறுவனங்களுக்கு விசேட கழிவுண்டு. திருக்கணிதம்- சாவகச்சேரி. [சி-1755]

### விற்பனையாகின்றன

New Class Work Book Year 9, Year 10, 11 கணிதப் பயிற்சி, ஆண்டு 1—5 தமிழ் மொழி அடிப்படை அறிவு செயல் நூல்கள் ஆண்டு 1—10 வரை (புதிய பதிப்புகள்) வெளியீடு:கு. வி. அச்சகம், யாழ்ப்பாணம். [4628]

### வகுப்புகள்

German Language (Deutsch), Spoken English and English With Grammar, ஆங்கிலம், ஜேர்மன் (டொச்) மொழிகள் விசேஷமாக தனிப்பட்ட ரீதியில் படிக்கலாம். ச. சொர்ணலிங்கம், 4, கோபால் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (காங்கேசன்துறை வீதி, மனோகராத் தியேட்டர் சந்திக்கு அருகாமையில்). [20399]

### இலவச திருமண சேவை

30 வயது, பூராடம் 4, செவ்வாய் 2, பிரான்ஸ் மணமகனுக்கு மணமகள் தேவை. விவாகம் இலங்கையில் செய்யலாம். விண்ணப்பங்கள் ஏற்கப்படும். சந்திப்பு ஞாயிறு காலையில். து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. [4623]

32 வயது, பரணி 3, செவ்வாய் 12, U.K இல் தொழில் புரிபவருக்கு படித்த மணமகள் U.K இல் தேவை. விண்ணப்பங்கள் ஏற்கப்படும். சந்திப்பு ஞாயிறு காலையில். து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. [4624]

### திருமண சேவை

யாழ். இந்து, 33 வயது நிரம்பிய B. Sc. பட்டதாரி ஆசிரியருக்கு, பட்டதாரி மணமகள் விரும்பத்தக்கது. நட்சத்திரம்: மிருகசீரிடம் 4, செவ்வாய் 12, கிரகபாவம் 43/16, A B C D E விவாகப் பொருத்துனர், 20, கண்டி வீதி, கண்டிக்குளி. [20398]

''மணப் பொருத்தத்துக்கான ஜாதகங்கள், தகவல்கள் பரிவர்த்தனை நிலையம்'' திருமண சேவையை ஆரம்பித்துள்ளது. இசைவான துணையைப் பெற திருமணத்தை எதிர்கொள்வோர் ஜாதகங்களையும், தகவல்களையும் பதியலாம். தரகு நோக்கற்ற சேவை நிறுவனம் இது. 3, யாழ் வீதி யாழ்ப்பாணம். [4634]

### தேவை

ஒடியல் தேவை. தொடர்பு கொள்ளவும் 'அண்ணாபாம்' இணுவில். (சி-1829)

### புலமைப் பரிசில் பரீட்சை

ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான விசேட வினாத்தாள்கள் மலிவாகப் பெற்றுக் கொள்ளலாம். விடையளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்திக் கொடுக்கப்படும். Bond Institutes, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [சி-1825]

### A/L வினாத்தாள்கள்

A/L 91 பரீட்சைக்குத் தயாராகும் விஞ்ஞான மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். Bond Institutes, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [சி-1827]

### விசேட கழிவு

புதுவருட பிறப்பை முன்னிட்டு எமது கைத்தறி புடவைகள், வியாபாரிகளுக்கு விசேட கழிவில் வழங்கப்படும்.

பொது முகாமையாளர்,
யாழ். மாவட்ட-
புடவை நெசவாளர்-
கூட்டுறவுச் சங்கம்,
இருபாலை வீதி,
கோண்டாவில்.
[சி-1787]

---

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

O/L
பிரிவு — 2 DAY CLASSES (8—3)
பிரிவு — 3 EVENING CLASSES (3—6)
பிரிவு — 2 SAT., SUN. CLASSES (8—3)

ஆரம்பம்: 16 - 04 - 1992
[சி-1840]

---

சாவகச்சேரி இந்துக் கல்லூரி

## பழைய மாணவர் சங்கம்
## பொதுக் கூட்டம்

காலம்: 15 04-1992 புதன்கிழமை
பி ப. 3.30 மணிக்கு
இடம்: தொலைக்காட்சி மண்டபம் சா. இ. க

அங்கத்தவர்கள் அனைவரையும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

க. சந்திரசேகரம், அதிபர்.
Dr. S. S. அருளானந்தம், V. P தியாகராசா, இணைச் செயலாளர்கள்.
[20376]

---

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 24 — 06 — 1926
மறைவு: 05 — 04 — 1987

திதி: 0--04—1992

### செல்வி ப. இராமநாதன்
[ஓய்வு பெற்ற அதிபர், யாழ் இந்து மகளிர் கல்லூரி]

வெள்ளை நிற மல்லிகையோடு - தன்
உள்ளக் கமலத்தையும் - அந்த
உத்தமனுக்கே அர்ப்பணித்து வாழ்ந்த
உடன் பிறவா சகோதரிக்கு அஞ்சலி.

திரு. திருமதி லம்போதரன்

126/4, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.
[20346]

---

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
இலங்கை.

## ஈராண்டுப் பகுதி நேரக் கல்விப் பட்டப்பின் டிப்புளோமா கற்கை நெறி 1991/92 புதிய அனுமதி

பட்டதாரி ஆசிரியர்களிடமிருந்து மேற்படி கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தேர்வு நாடிகள் 1992-05-15 இல் 50 வயதுக்குக் குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

இக் கற்கை நெறி தொடர்பான விண்ணப்பப்படிவங்களைப் பெற விரும்புவோர், நிதிக்கிளையில் ரூபா 10/ செலுத்தி பற்றுச்சீட்டினைக் கல்விக் கிளை, சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடம் சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.

எழுத்துத் தேர்வொன்றிற்கும் அதன் பெறுபேற்றின் அடிப்படையில் நடாத்தப்படும் நேர்முகத் தேர்வு ஒன்றிற்கும் தேர்வு நாடிகள் தோற்ற வேண்டும்.

அனுமதிப் பரீட்சை 1992 06-21 அன்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெறும்.

தெரிவு செய்யப்படுவோர் 25 மைல் சுற்றாடலில் அமைந்துள்ள பாடசாலைக்கு இடமாற்றம் பெறுவதோடு, இக் கற்கை நெறிக்குப் பதிவு செய்யும் பொழுது இவ்விடமாற்றக் கடிதத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை சிரேஷ்ட உதவிப் பதிவாளர், கல்விக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் திருநெல்வேலி என்னும் முகவரிக்கு 1992-05-15ஆம் திகதிக்கு முன் அனுப்புதல் வேண்டும்.

— பதிவாளர்.

யாழ். பல்கலைக்-
கழகம்,
1992 04-07.
[சி-17..]

---

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
### கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்

மலர்வு: 05 — 03 — 1916
உதிர்வு: 20 — 04 — 1991

திதி: 09 — 04 — 1992

யாரிடம் செல்வோம் - யாரிடம் சொல்வோம்
எமக்கெல்லாம் நீ தானே!
கண்ணை இமை காத்தது போல் - காலம் எல்லாம்
எமைக் காத்து வந்தாயே!
எம் இதய தெய்வமே - எம் குடும்ப ஒளி விளக்கே!
எம்மை எல்லாம் வழி நடத்திய -
அன்புத் தந்தையே!!
உமது ஆத்மா சாந்தியடைய இறைவனை -
இறைஞ்சுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

369/1, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
[20386]

---

## ஓராண்டு நினைவஞ்சலி

''நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்பு பாராட்டு முலகு'' (குறள்; 994)

பொருள்; நீதியையும், அறத்தையும் விரும்புதலால் உலகத்திற்கும், தமக்கும் பயன்படுதலுடையாருடைய பண்பினை உலகத்தார் கொண்டாடுவர்.



அமரர்
### செல்லையா இராமலிங்கம்
[சட்டத்தரணி, மல்லாகம்]

தோற்றம்: 01-01-1911
மறைவு: 22-03-1991

ஆண்டுத் திதி: 09-04-1992

நிருத்தனின் நீழ் கழலடியில் நித்திய சுகம் பெறப் பிரார்த்திக்கிறோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பிள்ளைகள்.
[20373]

---

யாழ். ஆங்கில மருத்துவர் சங்கம்
வடபிராந்தியம்

## பொதுக் கூட்டம் பற்றிய
## ★ அறிவித்தல் ★

இடம்: யாழ். வர்த்தகர் சங்கப்பணிமனை,
சங்கரப்பிள்ளை கட்டடம்,
162, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
காலம்: 22-04-1992 [புதன்கிழமை].
நேரம்: பிற்பகல் 3-00 மணி.

★ முக்கிய குறிப்பு:
சகல ஆங்கில மருந்து வர்த்தகர்களும் தவறாது சமுகம் கொடுக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

நன்றி

தலைவர், செ. சிவபாதம்.
கௌரவ செயலாளர், சிவஞானம் - ஸ்ரீகணேஷன்.
[4635]

---

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்.கிளை
தலைமையலுவலகம்

## வாழைநார் பயிற்சி உதவி ஆசிரியர்

மேற்படி பதவிக்கு பின்வரும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலுள்ள உதவி ஆசிரியர்கள் விண்ணப்பிக்கவும். அந்தந்த பிரிவுகளில் வாழைநார் பயிற்சியில் தேர்ச்சியும், அனுபவமும், ஆற்றலும் பெற்றவர்கள் விரும்பப்படுவர்.

| | | | |
|---|---|---|---|
| 01. | நெடுந்தீவு | 02. | ஊர்காவற்றுறை |
| 03. | வேலணை | 04. | சங்கானை |
| 05. | சண்டிலிப்பாய் | 06. | தெல்லிப்பழை |
| 07. | உடுவில் | 08. | நல்லூர் |
| 09. | யாழ்ப்பாணம் | 10. | சாவகச்சேரி |
| 11. | கோப்பாய் | 12. | கரவெட்டி |
| 13. | பருத்தித்துறை | 14. | மருதங்கேணி |
| 15. | பளை | | |

விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடைசித் திகதி 27-04-1992. நேர்முகப் பரீட்சை 30-04-1992 முற்பகல் 10-00 மணிக்கு நடைபெறும். தனித் தனிக் கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது.

ச. சிவானந்தராசா,
கௌரவ செயலாளர்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
07-04-1992
[சி-1788]

---

## Bata பாட்டா

வட பகுதி மக்களின் நலன் கருதி
தற்போது
வவுனியா நகரில் மொத்த விற்பனை நிலையம்
ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

★ புத்தாண்டை முன்னிட்டு ★
14% முதல் 25% வரை விஷேட கழிவு உண்டு.

உங்கள் தேவைகளுக்கு:
பாட்டா மொத்த விற்பனை நிலையம்
இல. 35, மில் றோட், வவுனியா.
[20334]

---

நன்றியுடன் நினைவு கூருகின்றோம்

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 18-06-1918
★
உதிர்வு: 09-04-1990

அமரர்
### உவில்லியம் ஞானசிகாமணி-அன்னப்பா
(இளைப்பாறிய அதிபர், மானிப்பாய் - மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை)

'' நான் கர்த்தருடைய வீட்டில்
நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன் ''
சங். 23:6

மனைவி. பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரி, மைத்துனர்.

யாழ்ப்பாண வீதி,
மானிப்பாய்.
[4636]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### அர்த்தமே அது தான்!

வடக்கு - கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் சிவில் நிர்வாகத்தைக் கொண்டு வருவது குறித்து அரசாங்க அமைச்சர்கள் இப்போது அடிக்கடி பேசிக் கொள்கிறார்கள். அதற்கான தமது வகை சார்ந்த செயற்பாடுகளிலும் இறங்குகிறார்கள்.

வடக்கின் பெரும் பிரதேசம் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ளதாகவும், அங்கெல்லாம் சிவில் நிர்வாகம் நடப்பதாகவும் தென்னிலங்கை மக்களுக்கும், உலகத்துக்கும் காட்ட வேண்டிய தேவை அரசுக்கு உண்டு

அந்தத் தேவையை நிறைவேற்றுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட பத்திரிகையாளர் விஜயங்களை அரச அதிகாரிகள் நடத்தி வருகின்றனர். அத்தகைய ஒரு விஜயம் கடந்த திங்கட்கிழமை ஊர்காவற்றுறையில் இடம்பெற்றது!

ஊர்காவற்றுறையில் பெரும் எண்ணிக்கையான தமிழ் மக்கள் வாழ்வதாகவும், அவர்களுக்கு வேண்டிய வசதிகளை அரசாங்கம் செய்து கொடுப்பதாகவும் பிரசாரம் செய்யும் நோக்குடன் இந்த ஏற்பாடு செய்யப்பட்ட "விஜயம்" ஒழுங்காகி இருந்தது.

ஆனால் இந்த "விஜயத்தில்" வந்திருந்த சில வெளிநாட்டுச் செய்தியாளர்கள் அரசு எண்ணியதற்கு எதிர்மாறாக, உண்மையை எடுத்துச் சொல்லி விட்டார்கள்! அவர்களில் பி.பி.ஸியின் கொழும்புச் செய்தியாளர் அங்குள்ள நிலையை அப்பட்டமாக எடுத்துக் கூறியுள்ளார்.

ஊர்காவற்றுறையில் சுமார் ஐந்நூறு மக்களே தங்கியுள்ளார்கள். அவர்களில் மிக அனேகர் முதியவர்கள். அவர்களும் தங்கள் வீடுகளில் சுதந்திரமாக வாழக் கூடியதாகப் பாதுகாப்பு இல்லை. அதனால் இராணுவ முகாம்களிலேயே தங்க வைக்கப்படுகின்றனர். வீடுகளுக்குச் சென்று குடியிருக்க அனுமதிக்கப்படுவதில்லை

அவர்களுக்கு வரும் கடிதங்கள் உடைத்துப் படிக்கப்பட்ட பின்னரே வழங்கப்படுகின்றன. அவர்கள் எழுதும் கடிதங்களுக்கும் அதே நிலைதான். இதனால் அவர்களுக்குத் தமது குடும்ப அலுவல்கள் சம்பந்தப்பட்ட இரகசியங்களைப் பரிமாறிக்கொள்ளும் சுதந்திரம் இல்லை. தாங்கள் வாழும் பகுதியில் சுதந்திரமாக நடமாடும் சுதந்திரம் தானும் அவர்களுக்கில்லை!

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள தமிழ்ப் பகுதிகள் இப்படித்தான் இருக்கும். அங்கு வாழும் மக்கள் இத்தனை கஷ்டங்களையும் அனுபவிக்க நேரிடும் என்ற உண்மையை இந்தத் தகவல்கள் உறுதி செய்கின்றன.

தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படாமல் இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்தால், படைகள் பிடித்த பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் இவ்வாறு பூரண அடிமைகளாக வாழும் நிலையே நீடிக்கப் போகிறது.

அன்றாட வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்கான சகல சுதந்திரங்களும், உரிமைகளும் மறுக்கப்பட்டவர்களாகத் தமிழர்கள் வாழ நேரிடும்.

இந்த அடிமை நிலையைத்தான் அரசாங்கம் தமிழர்களுக்கு சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றன; அவர்கள் மகிழ்ச்சியோடு வாழ்கிறார்கள் என்று வெளியிலே பறைசாற்றுகிறது.

தமிழர்கள் மீது அடிமை வாழ்வைத் திணிப்பதனையே, அரசாங்கம் தமிழர்களுக்கு வசதியும் வாய்ப்பும் வழங்குவதாக, சிவில் நிர்வாகம் உண்டாக்குவதாகக் கூறிக் கொள்கிறது என்று உலகம் புரிந்து கொண்டால் சரி!

அதே போல—

உண்மை நிலை தெரிந்தும் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள தமது ஊர்களுக்குத் திரும்பிச் சென்றால் என்ன என்று அலமலந்து நிற்கும் ஒரு சில தமிழர்களுக்கும் ஊர்காவற்றுறையின் படம், ஒரு நல்ல பாடமாக அமைய வேண்டும்.

# தொண்டர் ஆசிரியர் விவகாரம்; அனைவரும் அணிதிரள வேண்டும்

## ஆசிரியர் ஒன்றியம் அறிக்கை

கிளிநொச்சி, ஏப். 9

வடபகுதியில் தொண்டர் ஆசிரியருக்கு நியமனம் வழங்க மறுப்பது மற்றும் இதுபோன்ற ஸ்ரீலங்கா அரசின் மோசமான நடவடிக்கைகளுக்கு எதிராக அனைத்து தமிழீழ மக்களும், கல்விமான்களும், ஆசிரியர்களும், மாணவர்களும் அணிதிரண்டு போராட வேண்டியது அவசியமாகும்.

தமிழீழ தேசிய மாணவர் ஒன்றியத்தின் கிளிநொச்சி மாவட்டக் கிளையினர் இவ்வாறு அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளனர்.

அறிக்கையின் விவரம் வருமாறு:

1971 இல் க. பொ. த. உயர்தரத்தில் இனரீதியான தரப்படுத்தலை அமுல்படுத்திய ஸ்ரீலங்கா அரசு, இன்று தரப்படுத்தல் மட்டுமல்ல, தமிழீழத்தில் உள்ள கல்வி நிறுவனங்களின் தேவைகளை வழங்க மறுக்கின்றது. அது ஆசிரிய நியமனம் வழங்குவதையே இப்போது மறுத்து வருகிறது. தமிழீழ மக்களின் எதிர்காலக் கல்வியை சீரழிக்கின்ற நடவடிக்கையிலும் முனைப்புடன் இறங்கியுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் பின்வரும் கோரிக்கைகளை விடுக்கிறோம்.

★ இலங்கையில் சிங்களப் பிரதேசங்களில் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டதைப் போன்று தமிழ்ப் பிரதேசத்திலும், தொண்டர் ஆசிரியர்கள் உடனடியாக, நிரந்தரமாக்கப்பட வேண்டும்.

★ எமது மண்ணில் மாணவர்கள், ஆசிரியர்கள் மீது மேற்கொள்ளப்படும் படுகொலைகள், கைது செய்து சித்திரவதை செய்தல் போன்ற நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

★ பாடசாலைகள், நூலகங்கள், கல்வி நிறுவனங்கள் மீதான குண்டுவீச்சு அழிவு நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

★ கண்மூடித்தனமாக செய்யப்படும் கல்வி நிருவாக சீர்குலைவு வேலைகளை உடனடியாக நிறுத்த வேண்டும்.

★ பரீட்சைகள் குறித்த காலத்தில் திட்டமிட்டபடி நடத்தப்படுவதுடன், பரீட்சைக் காலங்களில் ஊரடங்கு அமுல்படுத்துவது நிறுத்தப்பட வேண்டும்.

எமது சிறார்களின் கல்விச் சீரழிவுக்கு எதிராக, சமூக விழிப்புள்ள அனைத்து மக்களும் கல்வி நிருவாக அதிகாரிகளும், ஆசிரியர்களும் ஒன்றிணைந்து குரல் கொடுப்போம் — என்று உள்ளது.

[ஓ]

## தமிழகக் கரையோரத்தில் பாதுகாப்பு மேலும் தீவிரம்

சென்னை, ஏப். 9

தமிழ் நாட்டின் கரையோரப்பகுதிகளில் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளது. இரு மேலதிக சோதனை நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தஞ்சாவூர் பொலீஸ் அத்தியட்சகர் திரு. ராஜேந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

புதுப்பட்டணம் கொலனி, அம்மன் சத்திரம் ஆகிய இடங்களிலேயே இந்த புதிய சோதனை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்றும் இவை இரண்டும் நிரந்தர சோதனை நிலையங்களாக மாற்றப்பட்டுள்ளன என்றும் அவர் சொன்னார்.

[ஒ-த]

## விபுலாநந்தர் வரலாற்று நூல்

சுவாமி விபுலாநந்தர் பற்றிய வரலாற்று நூல் ஒன்றை வெளியிடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மட்டக்களப்பு சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழாச் சபையினர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

சுவாமிகளின் பிறப்புத் தொடங்கி சமாதிவரை சகல விடயங்களையும் உள்ளடக்கியதாக இந்த நூல் அமைய வேண்டும் என்றும்—

சம்பவங்கள் யாவும் தக்க சான்று மற்றும் ஆதாரங்களுடன் தெளிவுபடுத்தப்பட்டிருக்க வேண்டும் என்றும்— விழாச் சபையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

பிரசுரத்திற்கான நூல் தெரிந்தெடுக்கப்பட்டு, நூலாசிரியருக்கு ஐயாயிரம் ரூபா சன்மானமும் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[ஓ]

## வவுனியாவில் கனத்த மழை!

வவுனியாவில் நேற்று முன்தினம் (செவ்வாய்க்கிழமை) பலத்த புயல் காற்றுடன் கனத்த மழை பெய்தது.

இதன் காரணமாக சுமார் 40 லட்சம் ரூபாவுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக வவுனியா அரசாங்க அதிபர் திரு. தில்லை நடராஜா தெரிவித்தார்.

[த]

## பலாலி நில அறைக்குள் அமைச்சர் ரேணுகா ஹேரத்

கொழும்பு, ஏப். 9

சில தினங்களுக்கு முன்னர் பலாலிக்கு விஜயம் செய்த சுகாதார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத் பலாலியில் இராணுவத்தினர் தமது பாதுகாப்புக்காக நிறுவி இருந்த நில அறை ஒன்றுக்குள்ளும் சென்று அதனைப் பார்வையிட்டார்.

ஊர்காவற்றுறையில் வைத்தியசாலை ஒன்றைத் திறந்து வைக்க திருமதி ஹேரத் யாழ்ப்பாணம் வந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

பலாலியில் உள்ள வைத்தியசாலையையும் அப்போது அவர் பார்வையிட்டார் என்றும்—

படையினரின் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பார்வையிட்ட போதே நில அறை ஒன்றுக்குள்ளும் அவர் சென்று நோட்டமிட்டார் என்றும் கூறப்பட்டது. (இ-10)

## வடக்கிலும் ஆடை தயாரிப்பு

கொழும்பு, ஏப். 9

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, மூதூர், கல்முனை, பொத்துவில், அம்பாறை ஆகிய இடங்களிலும் ஆடை தயாரிப்பு நிலையங்களை அமைக்க முதலீட்டாளர்கள் முன்வந்துள்ளனர்.

ஜனாதிபதி பிரேமதாசா இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

## நாடு நல்லதொரு திருப்பு முனை நோக்கி தற்போது செல்கிறது

### விபுலாநந்தர் விழாவில் ஜே. ஆர்.

"இவ் விழாவில் சிங்களப் பௌத்தனான நானும் இந்துத் தமிழரான திரு. செல்லச்சாமியும் சிங்களக் கத்தோலிக்கரான திரு. வின்சன்ட் பெரேராவும் கலந்து கொண்டு ஒரு தமிழ் மகனின் பெருமை பற்றிப் பேசுகின்றோம் என்றால் நாடு நல்லதொரு திருப்பு முனையை நோக்கிச் சென்று கொண்டிருப்பதற்கு நல்ல உதாரணமாகும்" — சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழாவில் உரை நிகழ்த்துகையில், முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனா மேற்கண்டவாறு கூறினார்.

இந்த ஒற்றுமை உணர்வு சாதாரண மக்கள் மத்தியிலும் ஏற்படும் என்று நம்புவதாகவும் திரு. ஜெயவர்த்தனா சொன்னார்.

கடந்த ஞாயிறு கொழும்பு இராமகிருஷ்ண சங்கத்தினால் நடத்தப்பட்ட இந்த விழாவில் திரு ஜெயவர்த்தனாவும். ஏனைய பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

[இ-எ]

## வயிற்றோட்டம்: குழந்தை மரணம்

தென்மராட்சி, ஏப் 9

வயிற்றோட்ட நோய்க்கு ஒன்றரை வயதுப் பெண் குழந்தை பலியான சம்பவம் சமீபத்தில் நாவற்குழியில் இடம் பெற்றது.

நாவற்குழி பாடசாலையடியைச் சேர்ந்த தர்ஷாசா தர்ஷா என்பவரே இறந்தவர் ஆவார். [த-117]

## கடற்படை விவகாரம்; ரஷ்யா - உக்ரைன் முறுகல்!

மாஸ்கோ, ஏப். 9

கருங்கடலில் உள்ள கடற்படை மற்றும் போர்க் கப்பல்கள் படையணி தமக்கே சொந்தம் என்று ரஷ்யாவும் உக்ரைனும் உரிமை கோரியுள்ளன.

கருங்கடல் கடற்படைத் தளம் உக்ரைன் நாட்டில் உள்ளது.

இது தொடர்பாக இரண்டு நாடுகளின் ஜனாதிபதிகளும் தனித்தனி ஆணைகளைப் பிறப்பித்துள்ளனர்.

கருங்கடலில் உள்ள போர்க் கப்பல்கள் அனைத்திலும் ரஷ்ய தேசியக் கொடியை ஏற்றும்படி ஜனாதிபதி பொரிஸ் யெல்ட்சின் தனது ஆணையில் கூறியுள்ளார்.

இதேவேளை— உக்ரைன் ஜனாதிபதி விடுத்துள்ள ஆணையில், கருங்கடலில் நிலை கொண்டுள்ள விமானந்தாங்கிக் கப்பல்களில் உள்ள போர் விமானங்கள் அனைத்தும் தரையிலே இருக்கவேண்டும் என்று கூறியுள்ளார்.

[ஓ-எ]

## நல்லூர்ப் பகுதியில் சனி, ஞாயிறு கடை திறப்பு

யாழ்ப்பாணம், ஏப். 9

புதுவருடத்தை முன்னிட்டு எதிர்வரும் சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட வர்த்தக நிலையங்கள் யாவும் திறந்திருக்கும் என நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம் அறிவித்துள்ளது.

நாள் வியாபாரத்துக்கும் கை விசேஷத்துக்கும் மட்டும் 13 ஆம் திகதி புதுவருட தினத்தன்று வர்த்தக நிலையங்களைத் திறக்கவாம் என்றும் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (ஓ)

## ஓய்வூதியருக்கு ரூ. 1,000 மட்டும்!

மானிப்பாய், ஏப் 9

சுன்னாகம் கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு மார்ச் மாதத்துக்குரிய தொகையில் ஆயிரம் ரூபா மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது.

போதியளவு பணப்புழக்கம் இல்லாததே, இதற்குக் காரணம் என்று கூறப்பட்டது

[ஓ-90]

## உண்ணா விரதம்

யாழ்ப்பாணம் ஏப். 9

தியாகி தீ ம் அன்னை பூபதியின் நான்காவது ஆண்டினை நினைவுகூரு முகமாக இன்று புலோலியில் உள்ள உபய கதிர்காமத்தில் உண்ணா விரதம் மற்றும் நினைவுக் கருத்தரங்கு நிகழ்ச்சிகள் நடைபெறும்.

★ ★ ★

கொழும்புத்துறை மணிப்புரி கலைமகள் சனசமூக நிலையத்தினரின் ஏற்பாட்டில் கடந்த பத்துத் தினங்களாக இடம் பெற்றுவரும் அன்னை பூபதியின் நினைவு தொடர்பான அடையாள உண்ணா விரதம் இன்று நண்பகல் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியுடன் நிறைவுபெறும் [த-உ]

# அருளுடைமை விரிந்த நோக்கு ஆயரின் ஆளுமைப் பொலிவு

பேராயர் தியோகுப் பிள்ளை ஆண்டகை அவர்கள் எழுபத்தைந்தாவது வருடத்தினை எட்டும் இத்திருநாள் ஈழத்துத் தமிழர் யாவர்க்கும் ஒரு முக்கிய நாளாகும்.

> யாழ். ஆயர் அதிவண கலாநிதி மேதகு தியோகுப் பிள்ளையின் 75 ஆவது பிறந்த தினம் இன்று ஏப்ரல் ஒன்பதாம் திகதியாகும்.
>
> மேதகு தியோகுப் பிள்ளை துறவியாகி 50 வருடங்களையும் பேராயராகி 25 வருடங்களையும் பூர்த்தி செய்துள்ளார்.
>
> இவர் கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை அதிபராகவும், அனுராதபுரம் சென். ஜோசப் கல்லூரி. கரவெட்டி திருஇருதயக் கல்லூரி. இளவாலை சென் ஹென்றீஸ் கல்லூரி ஆகியவற்றின் அதிபராகவும் பணிபுரிந்துள்ளார்.

1983 முதல் பேராயர் அவர்கள் தமிழ் மக்களின் விடுதலைக் குரல்களில் ஒன்றாக விளங்கி வருகின்றார்.

ஈழத்துத் தமிழரின் இன்னல்களையும் அவர்கள் மீது திணிக்கப்பெற்ற, பெறும் இடர்களையும் உலக அரங்கில் அதிகாரபூர்வமான செய்தியாக்கிய அவரின் குரலுக்கு ஒரு முக்கிய இடமுண்டு.

இந்தப் பணியினை அவர் ஒரு தெய்வ மனிதராகவே அதாவது தெய்வத்தின் மனிதராகவே நின்று செய்து வருகின்றார்.

அருளுடைமையும். தண்ணளியும் விரிந்த கண்ணோட்டமும் அவர் ஆளுமையின் பொலிவை நிறைவு செய்பவை.

கிறிஸ்துவைத் தமிழ்ப் பண்பாட்டின் தளத்திலும் சுருதியிலும் காண்பது அவரது பிரதான குணாநலனாகும். தமிழின் அம்மானை இசையிலும் அரங்குப் பாடல்களின் சுவையிலும் அவர் கிறிஸ்துவினைக் காண்பவர்.

வாழ்த்துவதையே தனது தெய்வப்பணியாகக் கொண்டவரை அவரது பிறந்த

பேராசிரியர்
கா. சிவத்தம்பி

நாளன்று நாம் வாழ்த்துகிறோம். அந்த வாழ்த்தினூடாக "மானிடம்" வாழ வேண்டுமென்று.

நமது வாழ்த்து உண்மையில் நாம் கடவுளிடத்து விடுக்கும் வேண்டுதலே பேராயரின் அபி[illegible] காலம் எமக்குக் கிட்டுவதாக.

★

## உயர்ந்த மனிதனின் சோக வாழ்க்கை!

உலகில் "உயர்ந்த" மனிதர்களில் ஒருவர் கினி நாட்டிலும் வாழ்ந்து வருகிறார்.

இந்த உயர்ந்த மனிதன், தாம் மிகவும் சோகமான வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருப்பதாகக் கூறுகிறார்.

8 அடி 8 அங்குலம் உயரமுடைய இவரின் பெயர் மமது டியல்லோ. வடகினியில் குண்டார மாவட்டத்தில் வாழ்ந்து வரும் இவருக்கு வயது 37. இவர் இன்னும் திருமணம் செய்யவில்லை.

தனக்கு திருமணம் செய்ய விருப்பம் இருந்த போதிலும், சரியான பொருத்தமான மணமகள் கிடைக்கவில்லை என்று கவலையுடன் கூறுகிறார் மமது

இவர் தமது உயரம் காரணமாக வாழ்க்கையில் பல தரப்பட்ட துயரங்களையும், அவமதிப்புக்களையும் சந்தித்து நொடிந்து போய், வெறுப்புடன் காணப்படுகிறார்.

வீதிக்குச் சென்றால் சிறுவர்கள் இவரைச் சூழ்ந்து கொண்டு, "இராட்சதன், இராட்சதன்" என்று கூக்குரல் எழுப்புகிறார்கள். மக்கள் இவரை அதிசய பொருள் ஒன்றைப் பார்ப்பது போலவும், கேலியுடனும் நோக்குகின்றனராம்.

இதனால் சொல்லொணா வேதனை அடைந்திருக்கிறார் மமது.

ஒருமுறை மமது தற்கொலை செய்யும் நோக்கில் ஆற்றில் பாய்ந்தார்.........! அங்கும் தோல்வி தான்.

ஆற்றில் குதித்த மமது மூழ்கவில்லை.........!! அங்கேயும் இவரது உயரம் குறுக்கே நின்று விட்டது !!!

(ஓ-க)

## தேர்தலில் ஐ. தே. க. வென்றது எவ்வாறு?

### உடுகம்பொல விவரிக்கிறார்

கறுப்புப் பூனைகளின் பயங்கரவாத நடவடிக்கைகளாலேயே 1989 பொதுத் தேர்தலில் ஐ. தே. க. வெற்றி பெற முடிந்தது — என்று முன்னாள் பிரதிப் பொலீஸ் மா அதிபர் பிரேமதாசா உடுகம் பொல தெரிவித்திருக்கிறார்.

திரு. உடுகம்பொல கையெழுத்துடன் அறிக்கை ஒன்று கடந்த திங்கட்கிழமை வெளியிடப்பட்டிருந்தது தெரிந்ததே.

இதே வேளை திரு. உடுகம்பொலவின் பேட்டி ஒன்று அண்மையில் 'த ஐலண்ட்' பத்திரிகையில் வெளியாகியது.

அந்தப் பேட்டியில் அவர் தெரிவித்துள்ள மேலதிக தகவல்கள் வருமாறு:

இலங்கையில் மனித உரிமை மீறல் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்படுவதானால் அரசியல்வாதிகள் தொடர்பான விஷயங்களும் விசாரணை செய்யப்பட வேண்டும்.

கறுப்புப்பூனைகள் படைக்கு ஐ. தே க. உறுப்பினர்களே பொறுப்பாக இருந்தார்கள். தேர்தல்களின்போது ஸ்ரீ. ல. சு. க. உறுப்பினர்களை ஒழித்துக் கட்ட இந்தச் சிறப்புப் படை உருவாக்கப்பட்டது.

இரு மாவட்டங்களிலிருந்து ஐ தே க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கறுப்புப் பூனைகளை விநியோகித்து வந்தார்கள். அக்காலத்தில் இடம்பெற்ற கொலைகளை அவர்களே செய்தார்கள்.

ஆளும் கட்சி உறுப்பினர்கள் தம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவும் கறுப்புப் பூனைகளைப் பயன்படுத்தினர்.

1989 தேர்தலின் போது வாக்காளர் ஆள் மாறாட்டம் செய்வதற்காக தபாற் கந்தோர்களிலிருந்து தேர்தல் அட்டைகளை எடுக்கும் வழிவகைகள் பற்றித் தமது அடியாட்களுக்கு ஐ தே க. உறுப்பினர்கள் சொல்லிக் கொடுத்தனர். [அ-10]

## எதிர்க்கட்சி பிரதிநிதிகள் மட்டக்களப்பு செல்வர்

கொழும்பு, ஏப். 9

நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்று எதிர்வரும் 18 ஆம் திகதி மட்டக்களப்புக்கு விஜயம் செய்யவுள்ளது

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அகதிகளின் அடிப்படைத் தேவைகளை ஆராயும் முகமாகவே இவ் விஜயம் மேற்கொள்ளப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இக் குழுவினர் அகதி முகாம்களைப் பார்வையிடுவதுடன் மட்டக்களப்புச் செயலகத்தில் அரச அதிபர் திரு. ஏ. மௌனகுருசாமி தலைமையில் நடைபெறும் மாநாட்டிலும் கலந்து கொள்வர்.

புனர்வாழ்வு புனரமைப்பு சமூகநலத்துறை அமைச்சின் பிரதிநிதியும் இம் மாநாட்டில் பங்கேற்பார். (ஒ-த)

## புதுவருட தினத்தன்று நகரில் முப்பெரும் விழா

யாழ்ப்பாணம், ஏப் 9

புதவருடப்பிறப்பை முன்னிட்டு — புத்தாண்டு தினமான எதிர்வரும் இக்கிழமை யாழ்ப்பாணம் பஸ் நிலைய ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தில் முப்பெரும் விழா நடைபெறவுள்ளது.

யாழ். நகர அனைத்து வர்த்தகர்களும் இணைந்து இவ் விழாவை ஏற்பாடு செய்துள்ளனர்.

விழா ஆரம்பத்தில் — புத்தாண்டு உதய வேளையில் — தமிழீழ மண்ணில் சமாதானமும், சுபீட்சமும், அமைதியும் ஏற்பட விசேட அபிஷேகங்கள் பூசைகள் இடம்பெறும்

தொடர்ந்து மாலை 5 மணிக்கு மங்கள இசை முழங்க. 5-30 மணியளவில் விளக்கேற்றலுடன் விழா ஆரம்பமாகும்.

விழாவில் தொடர்ந்து "புத்தாண்டும் தமிழீழமும்" என்ற அறிவியல் அரங்கமும், "காலை ஒன்று கிழக்கில் விடிந்தது" என்ற கவியரங்கம் நிகழ்ச்சியும் மற்றும் பட்டி மண்டபம், கௌரவிப்பு போன்ற நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

தவில் மேதை கைதடி பழனிமலை "கரவேக நாசிம்மம்" என்ற கௌரவப் பட்டமும் கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் "இலக்கியக் கொண்டல்" என்ற கௌரவப் பட்டமும் வழங்கி கௌரவிக்கப்பட உள்ளனர்.

விசேட நிகழ்ச்சிகளாக நாதஸ்வரமேதை கே. எம். பஞ்சாபிகேசன் குழுவினர், தவில் மேதை கைதடி பழனிமலை, [illegible] முருகையா ஆகியோரின் நாதஸ்வர இசையாங்கமும்—

"தன்னலமற்ற தம்பியர் வாய்த்தது" என்ற இதிகாச பட்டிமண்டபமும் இடம் பெறும். பட்டிமண்டப நிகழ்ச்சிக்கு நடுவராக கம்பன் கழக அமைப்பாளர் திரு இ ஜெயராஜ் விளங்குவார்.

## தீ விபத்தில் 10 பேர் பலி

புதுடில்லி, ஏப்.9

இந்திய மகாராஷ்டிர மாநிலத்திலுள்ள பூனே நகரில் வெடிமருந்து தொழிற்சாலை ஒன்றில் நேற்று ஏற்பட்ட தீ விபத்தில் 10 பேர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கேசன் களஞ்சியம் இயங்குவதற்கு ஏற்பாடு!

புதுவருடத்துக்குத் தேவையான பொருள்களை வழங்கும் பொருட்டு, காங்கேசன்துறை களஞ்சியத்தில் வேலைகள் நடைபெறும் என அறிய வருகிறது.

களஞ்சியத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் லீவில் செல்வதால் அது ஒழுங்காக இயங்க முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் களஞ்சியத்தில் இருந்து உணவுப் பொருள் விநியோகிக்கும் வேலைகள் பாதிக்கப்படலாம் என அஞ்சப்பட்டது.

ஆனால் கொழும்பிலிருந்து புனர்வாழ்வு அமைச்சு அதிகாரிகள் அனுப்பிய அறிவுறுத்தலின் பிரகாரம் புதுவருடத்தை முன்னிட்டு களஞ்சியம் இயங்க உள்ளதாகவும் நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் உணவுப் பொருள்களை ஏற்றி வருவதற்காக வாகன அணி இங்கிருந்து காங்கேசன்துறைக்குச் செல்லும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. [அ-3]


## தாலிக் கொடி தவறிவிட்டது

மட்டுவில் அம்மன் கோவிலில் கடந்த 6-4-1992 திங்கட்கிழமை எட்டுப்பவுண் தாலிக் கொடி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படுவதுடன் சுயவிருப்பத்தின் படி கௌரவிக்கப்படுவர்.

மு. பழனியப்பன்

543/1 ஆடியபாத வீதி,
நல்லூர் வடக்கு. [20401]



## WALK-IN INTERVIEW

**COMPUTER PROGRAMMER**

Interview — Thursday & Friday
9-00 a. m. — 12-00 noon

**UTHAYAN**
POWER HOUSE ROAD,
JAFFNA. [C/1791]



## புதிய உயர் கல்லூரி

(New College of High Studies)

**G. A. Q. - 92/93**

பேராதனை

பரீட்சைக்குப் பதிவு செய்வதற்குரிய விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளவும்.

விண்ணப்ப முடிவு திகதி: 15 — 04 — 1992
விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

**B. A. - 1992**

விரிவுரைகள் ஆரம்பம்: 11 — 04 — 1992 (8 மணி)

[எமது நிறுவன மாணவர்களுக்கு மட்டுமன்றி ஏனைய மாணவர்களுக்கும் அனுமதி வழங்கப்படும்.]

நிர்வாகி:
எஸ். அருள்நங்கை.

[சி-1844]



வாடிக்கையாளர் அனைவருக்கும்
எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!

வடமராட்சி வாடிக்கையாளர்களுக்கு
ஓர் அரிய சந்தர்ப்பம்!!

23-03-92 முதல் 13-04-92 வரை

மிகக் குறைந்த விலையில் சகலவிதமான புடவைகளும் விற்கப்படுகின்றன.

★ சூட்டிங் சேட்டிங்
★ ரவுசர், சேட் வகைகள்
★ றெடிமேட் ஆடைகள்
★ பிளவுஸ் பீஸ் வகைகள்
★ இறக்குமதி செய்யப்பட்ட சாறி வகைகள்

மற்றும் பலவகை புடவைகளுக்கு இன்றே நாடுங்கள்!

**ஆனைமுகன் புடவை மாளிகை**

யாழ். வீதி, நெல்லியடி, கரவெட்டி.

தலைமை நிலையம்:
**லக் எம்போறியம்**
பிரதான வீதி, பருத்தித்துறை.

விலையுயர்ந்த பரிசில்கள் காத்திருக்கின்றன.

[சி/1790]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 9-4-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## இன்று

தென்மராட்சி, ஏப். 9

சாவகச்சேரி நகரசபைப் பகுதிக்குள் விசர் நாய்க் கடியின் பாதிப்பைத் தடுத்தல் பற்றிய கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு சாவகச்சேரி நகரசபை சபா மண்டபத்தில் நடைபெறும். [உ]

★ ★ ★

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பாடுமீன் நீல அணியை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக அணியும், நியூ சுப்பர் அணியை எதிர்த்து மோகனதாஸ் அணியும் மோதுகின்றன.

முதலாவது ஆட்டம் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்திலும் மற்றைய ஆட்டம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்திலும் இன்று பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகும். (உ)

★ ★ ★

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாத ஞானசம்பந்த பரமாசாரிய தேசிக சுவாமிகளின் 11 ஆவது குரு பூசை இன்றாகும். அதனை ஒட்டி நல்லை ஆதீனத்தில் இன்று காலை முதல் மாலை வரை பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

குருபூசையை முன்னிட்டு பிற்பகல் 3 மணி முதல் பண்ணிசை அரங்கம் இடம்பெறும். இரவு 8 மணிக்கு கம்பன் கழக அமைப்பாளர் இ. ஜெயராஜ் தலைமையில் பட்டிமன்ற நிகழ்ச்சி ஒன்றும் இடம்பெறவுள்ளது.

### சஹாரா..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விமானம் காணாமற் போனதை அடுத்து அதைக் கண்டுபிடிக்க உதவும்படி செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு, சிவில் விமானப் போக்குவரத்து ஸ்தாபனம், சர்வதேச செய்மதி நிறுவனங்கள், வளிமண்டல அவதானிப்பு நிலையங்கள் ஆகியவற்றின் அவசர உதவியை லிபிய சிவில் போக்குவரத்து நிறுவனம் நாடியது.

தேடுதலுக்கு உதவுமாறு அமெரிக்காவுடன் பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி ஆகிய நாடுகளிடமும் கோரிக்கை விடுக்கப்பட்டது. (உ-எ-த-10)

### 15 மணி .

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

களைக் கிரகிக்க முடிந்தது.

அதனைத் தொடர்ந்து விமானம் சஹாரா பாலைவனத்தில் தரையிறங்கி நிற்பதை அமெரிக்க செயற்கைக் கோள் கண்டுபிடித்தது.

விமானம் பாலைவனப் பகுதியில் காணாமற் போன செய்தி வெளியானதை அடுத்து—

விமானத்தைக் கண்டுபிடிக்க அமெரிக்க செயற்கைக் கோள்களைப் பயன்படுத்தி உதவும்படி பலஸ்தீன விடுதலை இயக்கப் பிரமுகர்கள் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷுக்கு அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்தனர்.

இந்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட அமெரிக்க ஜனாதிபதி சகல செயற்கைக் கோள்களையும் பயன்படுத்தி விமானத்தைத் தேடும்படி பணித்தார் என்றும் அறிவிக்கப்பட்டது. [உ-எ-10]


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

விஞ்ஞான பீட முதலாம் அரையாண்டுப் பரீட்சை 1991

மேற்படி பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை மீள் பரீட்சார்த்திகள் பரீட்சைக் கிளை, யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து 09-04-92 முதல் பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்.

[C/1789]


## மாணவர் மதிய உணவு முத்திரை:

# கோட்டப் பணிப்பாளரே இனி முழுப் பொறுப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 9

மாணவர் மதிய உணவு முத்திரை விநியோகம் சம்பந்தமான சகல வேலைகளுக்கும் இனி கோட்டக் கல்விப் பணிப்பாளர்களே பொறுப்பு. உரிய காலப் பகுதியில் அது தொடர்பான வேலைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

இவ்வாறு வடபிராந்திய கல்விப் பணிப்பாளர், சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்களையும் பணித்துள்ளார்.

உணவு முத்திரை வழங்கலில் ஏற்பட்டு வரும் ஒழுங்கீனங்களைத் தவிர்க்கும் முகமாகவே இந்நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-5)

## நகரில் நடக்கும் 'கல்வாரிப் பரணி'

குருநகர், ஏப். 9

தவக்காலத்தை முன்னிட்டு கிறிஸ்துவின் பாடுகளைச் சித்தரிக்கும் "கல்வாரிப் பரணி" என்னும் இசையுரை பக்தி நாடகச் சித்திரத்தை யாழ். திருமறைக் கலாமன்றம் மேடையேற்ற உள்ளது.

நாளை 10 ஆம் திகதியும் 11 ஆம், 12 ஆம் திகதிகளிலும் மாலை 6-45 மணிக்கு யாழ் பிரதான வீதி மன்றக் கலையரங்கில் இசை நாடகம் இடம்பெறும். [ஒ-51]

## நாளை

குருநகர், ஏப். 9

யாழ். மாவட்ட இறைச்சிக் கடை வியாபாரிகள் சங்கத்தின் ஆண்டு விழாக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சின்னக்கடை வடக்கு வீதியிலுள்ள சங்கக் காரியாலயத்தில் நடைபெறும்.

பிரதம அதிதிகளாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ். மாநகரசபை ஆணையாளர், தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் ஆகியோர் கலந்து கொள்வர். [ஒ-51]

### வடக்கில் .

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

படும் கவனம் இனிக் கிழக்கின் மீது செல்லும் என்றும்—

அங்கு இராணுவ நடவடிக்கைகள் முனைப்புடன் முழு அளவில் தீவிரப்படுத்தப்படும் என்றும்—

மூன்று மாதங்களில் கிழக்கின் முழுப் பகுதியையும் பிடித்து, அங்கு தேர்தலை நடத்த வசதி செய்வது என்றும் — இராணுவம் முடிவு செய்துள்ளதாம்.

இத்தகவல்களை மூத்த இராணுவ அதிகாரிகள் தம்மிடம் தெரிவித்ததாக திரு. மொறிஸ் கூறினார்.

1988, 1989ஆம் ஆண்டுகளில், தென்பகுதியில், பல்லாயிரக் கணக்கான அப்பாவி மக்களின் உயிர்ப்பலியின் மத்தியில் அரசு ஜே. வி. பியின் கிளர்ச்சியை அடக்கியது போல, கிழக்கில் எடுக்கப்படும் நடவடிக்கையால் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் உயிரிழக்க நேரிடலாம் என்று இராணுவ அதிகாரிகள் சிலர் அச்சம் தெரிவித்தனர். [அ-10]

### இராணுவ. .

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தாக்குதலைத் தவிர்த்தது கூட்டுப்படையின் அதிகாரம் பறிக்கப்பட்டது ஆகியன ராஜினாமா முயற்சிகளுக்குக் காரணங்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடும் போக்குடைய அதிகாரிகளுக்கும் ஏனையோருக்கும் இடையில் ஏற்பட்ட பிளவினாலும் ராஜினாமாக்கள் அதிகரிக்கலாம் என்று அவதானிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தின் மீதான தாக்குதல் தவிர்க்கப்பட்டது இராணுவத்தினரின் முடிவல்ல என்றும் அரசியல் ரீதியாக எடுக்கப்பட்ட முடிவு என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தில் புலிகளை ஒடுக்குவதற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் 3 மாத கால அவகாசம் போதாது என்று சில உயர் அதிகாரிகள் வருந்துகிறார்களாம்.

இராணுவத் தலைமைப்பீடம் ஒரு சடுதியான தீர்வைக் காண விழைகிறது. பாதகமான [illegible] இராணுவ அதிகாரி ஒருவர் கருத்து வெளியிட்டார். [அ-10]

## அதிகரிப்பு

நெல்லின் உத்தரவாத விலையை கிலோ ஒன்றுக்கு ஏழு ரூபாவாக நெல் சந்தைப்படுத்தும் சபை அதிகரித்துள்ளது.

இந்த அதிகரிப்பு உடனடியாக அமுலுக்கு வருவதாக சபை அதிகாரிகள் கூறினர்.

விவசாயிகளிடமிருந்து நெல்லை ஒரு கிலோ 7 ரூபா வீதம் இனி நெல் சந்தைப்படுத்தும் சபை வாங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### உடுகம்பொல...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பற்றியும் காலத்துக்குக் காலம் முறைப்பாடுகள் செய்யப்பட்டு வந்தன என்றும் பொலீஸ் மா அதிபர் எனக்கு அறிவித்திருக்கின்றார்.

திரு. உடுகம்பொலவின் நடத்தை குறித்து சர்வதேச ஏஜன்சிகள், இலங்கைக்கு உதவும் நாடுகள் மற்றும் மனித உரிமை அமைப்புகள் ஆகியன பாதகமான விமர்சனங்களை வெளியிட்டு வந்தன.

எதிர்க்கட்சித் தலைவரும் ஏனைய அரசியல் கட்சிகளின் தலைவர்களும் திரு. உடுகம்பொலவின் நடவடிக்கைகளுக்கு எதிராக முறைப்பாடுகள் செய்திருந்தனர். விஜயனாராச்சி கொலை வழக்கில் மேல் நீதிமன்றம் திரு. உடுகம்பொல மீது கண்டனம் தெரிவித்திருந்தது.

இவற்றைத் தொடர்ந்து திரு உடுகம்பொலவுக்கு சேவை நீடிப்பு நிறுத்தப்பட்டது. இந்த நிலையில் திரு. உடுகம்பொல அரசுக்கு எதிரான பழிவாங்கல் மனப்பான்மையைக் கொண்டிருந்தார்.

கடந்த மாதம் நீதிமன்றம் கடவுச் சீட்டை ஒப்படைத்து இரகசியப் பொலீசாரின் விசாரணைக்குச் சமுகமளிக்குமாறு திரு. உடுகம்பொலவுக்கு உத்தரவிட்டது. உடுகம்பொலவைக் கண்டு பிடிக்க முடியாத காரணத்தினால் அவருக்கு நீதிமன்ற ஆணையை வழங்க முடியாத நிலையில் பொலீஸார் இருந்தனர்.

#### கறுப்புப்பூனை

கறுப்புப்பூனை என்ற பெயரிலான கொலைப் படையை அமைத்ததற்குத் தான் பொறுப்பு அல்லன் என்று உடுகம்பொல கூறுகின்றார்.

திரு. உடுகம்பொல எங்கெங்கு பணிபுரிந்தாரோ அப்பகுதிகளில் தான் கறுப்பு பூனை என்ற கொலைப்படையினர் செயல்பட்டு வந்தனர் என்பது தெளிவாகத் தெரிகிறது. முதலில் அவர் பணிபுரிந்த தெற்கு மாகாணத்திலும் பின்னர் அவர் சேவையாற்றிய வட மத்திய மாகாணத்திலும் கறுப்புப்பூனை கொலைப்படையினர் தென்பட்டனர் கடைசியாக அவர் சேவையாற்றிய மத்திய மாகாணத்திலும் கறுப்புப் பூனைப் படை செயல்பட்டது.

திரு. உடுகம்பொல தற்போது காலம் பிந்தி வெளியிட்டுள்ள குற்றச்சாட்டுகள் தனிப்பட்ட காரணங்களை நோக்கமாகக் கொண்டே வெளியிடப்பட்டுள்ளன. அவர் மீது விசாரணை ஒன்று நடத்தப்படவுள்ள இச்சந்தர்ப்பத்தில் தன்னை பாதுகாக்க அவர் எடுக்கும் ஒரு முயற்சியாக இது அமைந்துள்ளது. பல பொய்த் தகவல்களைக் கொண்டதாக திரு. உடுகம்பொலவின் அறிக்கை உள்ளது.

#### ஊழல் கோஷ்டியின் கைப்பொம்மை

திரு. உடுகம்பொல இன்னும் பொலிஸ் சேவையில் இருக்கிறார். ஆகவே அவரது அறிக்கை தாபனக் கோவைகளை மீறுவதாக உள்ளது.

ஊழல் கோஷ்டி ஒன்றின் கைப்பொம்மையாக அவர் மாறியுள்ளார் போல் தெரிகிறது. அந்த ஊழல்கோஷ்டி, தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் ஒன்றை வீழ்த்த சதி செய்து வருகின்றது.

பொருத்தமான நேரத்தில் பொருத்தமான இடத்தில் இச்சதியை அரசு அம்பலமாக்கும்.

இப்படி திரு. விஜேதுங்கா தமது அறிக்கையில் தெரிவித்திருக்கின்றார். [இ-எ]

# மலத்தியனுடன் ஹோர்லிக்ஸ் பருகிய மூவர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஏப். 9

குளுக்கோஸ் என நினைத்து மலத்தியோனை ஹோர்லிக்ஸுடன் கரைத்துப் பருகிய இரு குழந்தைகள் உட்பட மூவர் நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

வண்ணார்பண்ணை வடக்கு பெரிய தம்பிரான் கோவிலடிப் பகுதியில் இச்சம்பவம் நிகழ்ந்தது.

நடராசா ரஜீபன் [வயது 3] பாலையா தனுஷன் [வயது 5] செல்வரத்தினம் ஜெயவதி [வயது 23] ஆகியோரே மயக்க நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டவர்கள் ஆவர்.

ரஜீபன் என்ற சிறுவன் ஏற்கெனவே சுகவீன முற்றிருந்தார் என்றும் இவருக்கு ஹோர்லிக்ஸ் கரைத்த பேர்த்தியார் குளுக்கோஸ் என நினைத்து மலத்தியோனை ஹோர்லிக்ஸுடன் கலந்து மூவருக்கும் கொடுத்தார் என்றும் கூறப்பட்டது. [இ-15]

## சப்பறத் திருவிழா

யாழ்ப்பாணம், ஏப். 9

மூளாய் வதிரன்புலோ ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய முத்துச் சப்பறத் திருவிழா இன்று இரவு 8 மணிக்கு நடைபெறும். [ஓ]


# மரண அறிவித்தல்கள்

## ஆழ்வார் அப்பர்

சுழிபுரத்தைச் சேர்ந்த ஆழ்வார் அப்பர் கடந்த 05-04-1992 ஞாயிறு காலமானார்.

இவர் வள்ளியாச்சியின் அன்புக் கணவரும், புவனேஸ்வரி, செல்வரட்ணம் (France), திரவியம், திலோன்மணி, விஜயரட்ணம் (K. K. S. சீமெந்துக் கூட்டுத்தாபனம்), கமலகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், நவரட்ணம், தங்கராசா (கட்டார்), வனஜா, அருளானந்தன் (கட்டார்), போகமலர் ஆகியோரின் மாமனாரும், ராஜிதன், சுதாகரன், தயாகரன், சதீஸ், அஜாந்தி, நிருஷிகா, சாருண்யா ஆகியோரின் பேரனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று முற்பகல் (09-04-1992) 11-00 மணியளவில் திருவடி நிலை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்;
த. நவரட்ணம் (மருமகன்)
அ. விஜயரட்ணம் (மகன்)
[காங்கேசன் சீமெந்து கூட்டுத்தாபனம்]

பறாளாய் றோட்,
சுழிபுரம். [20396]

## சு. துரையப்பா

[இளம் தென்றல் கபே உரிமையாளர் புளியங்கூடல்]

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 9-30 மணியளவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை சகலரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
து. சிறிகுமாரன் [மகன்]

வெள்ளைப்பிள்ளையார் கோவிலடி,
செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு. [20402]

## L. J. பெனடிக்ற்

சில்லாலையைச் சேர்ந்தவரும் சுழிபுரம் ஐக்கிய சங்க சபைப் பாடசாலை ஆசிரியருமான திரு. L. J. பெனடிக்ற் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி லோறன்ஸின் அன்பு மகனும், திருமதி மேரி மாகிறற்றின் அன்புக் கணவரும், இளவாலை திருக்குடும்ப கன்னியர் மட மாணவிகளான செல்வி அகனெஸ் ஷயாமா, செல்வி மெடுனா ஆகியோரின் அன்புத் தந்தையும். மிருசுவில் அர்ச் நீக்கிலார் ஆலய பங்கு குரவர் அருட்திரு. லோறன்ஸ் சேவியர், செல்வி பிலோமினா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

பூதவுடல் அன்னாரின் இல்லத்திலிருந்து இன்று 9-ம் திகதி [வியாழன்] மாலை 3-30 மணிக்கு ஆராதனைக்காக கதிரை மாதா ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, ஆராதனையின் பின் சில்லாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்,
வைத்திய கலாநிதி அல்போன்சஸ் - அத்தனாசியர் [மைத்துனர்]

சில்லாலை. (20400)

## திருமதி இராமசாமி செல்லம்மா

கைதடி நுணாவிலைச் சேர்ந்த திருமதி இராமசாமி செல்லம்மா 25-3-92 இல் இந்தியாவில் காலமானார்.

இவர் சாவகச்சேரி பிரபல வர்த்தகர் இராமசாமியின் அன்பு மனைவியும், கதிர்காமு - ஆச்சிமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், தனலட்சுமி [லவா] முழங்காவில், கமலலட்சுமி, குகதேவி, மனோகரன், குணலட்சுமி, அன்னலட்சுமி, கருணாகரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், பாக்கியம், சின்னம்மா [ஆசிரியை], மகேஸ்வரி [ஆசிரியை], பரமேஸ்வரி [ஆசிரியை], துரைராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், றொபின் [மாவீரன்], கீதன், யோகா, பட்டு, அகிலன் [எரிபொருள் நிலையம் சாவகச்சேரி], கோகிலா, கஜலட்சுமி, இரூபன், வதனி, றதி, வாசுகி, றஜீவன், சதா, துசாந்தன், ஜீவன், வனஜா ஆகியோரின் பேத்தியும் கதிரவேலு [சிவன் ஸ்ரோஸ் முழங்காவில்], முத்துக்குமாரசாமி [ஆயுர் வேத வைத்தியர்], மகேஸ்வரன், யோகரட்ணம் [ஜேர்மனி], மனோறதி [ஆசிரியை] ஆகியோரின் மாமியாரும், சரவணமுத்து [அதிபர்], அருளானந்தம் [ஆசிரியர்], கனகலிங்கம் [ஆசிரியர்], இராசரத்தினம் [எழுத்தாளர்] புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனியுமாவார். உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
யோகா, அகிலன்.

[20403]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org